**செய்தி வெளியீடு எண்:915** **நாள்:26.11.2020**

## <u>செய்தி வெளியீடு</u>

வங்கக் கடலில் உருவான நிவர் புயல் மற்றும் கனமழை காரணமாக ஏற்படும் பாதிப்புகளைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள், 23.11.2020 அன்று ஆலோசனைக் கூட்டம் நடத்தி பொதுமக்களும் மாவட்ட நிர்வாகங்களும் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை, எழிலகத்திலுள்ள மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்தை பார்வையிட்டு, அவசர கட்டுப்பாட்டு மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் பணிகளை ஆய்வு செய்து, செய்தியாளர்களிடம் அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். மேலும், பொதுமக்கள் நிவர் புயல் பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதன் தொடர்ச்சியாக, 25.11.2020 அன்று செம்பரம்பாக்கம் ஏரியில் உபரிநீர் திறந்துவிடப்பட்டதையொட்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது செம்பரம்பாக்கம் ஏரிக்கு நேரில் சென்று, ஆய்வு மேற்கொண்டு அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்து பொதுமக்கள் யாரும் பாதிப்படையாவண்ணம் கரையோரப் பகுதிகளில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் தேவையான உதவிகளையும் வழங்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இன்று (26.11.2020) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டம், ரெட்டிச்சாவடி–கீழ்க்குமாரமங்கலம் கிராமப் பகுதிகளில் புயலால்

சேதமடைந்துள்ள வாழைத் தோப்புகளை பார்வையிட்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஆறுதல் கூறினார். தேவனாம்பட்டினம், அரசு முகாமில் புயல் மற்றும் மழைநீரினால் பாதிக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ள மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறி, குறைகளைக் கேட்டறிந்ததுடன், அவர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய பெட்டகத்தையும் வழங்கினார். மேலும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அரசு அதிகாரிகளிடம் கேட்டறிந்ததுடன் மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

கடலூர் மாவட்ட மீனவ மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்று அரசால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு, அவர்களுடைய படகுகளையெல்லாம் கடலூர், முதுநகர் துறைமுகப் பகுதியில் பத்திரப்படுத்தி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டார். மேலும் அப்பகுதி மீனவ கிராம மக்களைச் சந்தித்து அவர்களிடம் நிவர் புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்துக் கேட்டறிந்து, மனுக்களைப் பெற்றுக் கொண்டதுடன் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து கொடுக்க அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மேலும், தேசிய பேரிடர் மீட்புப் பணியினரிடமும் மீட்புப் பணி நடவடிக்கைகளை கேட்டறிந்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**